

# மிதக்கும் கனவுகள்

## (கவிதைகள்)

முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல்

# மிதக்கும் கனவுகள்

(கவிதைகள்)

முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல்

ஆயிஷா பதிப்பகம்

மருதமுனை.

# மிதக்கும் கனவுகள்

கவிதைகள்

ஆசிரியர்
**எம்.எம். நௌபல்** (SLPS, SLAS)

பதிப்புரிமை
**எம்.எம். மிஹ்லார், மருதமுனை.**

வெளியீடு
**ஆயிஷா வெளியீட்டகம்,**
**520, மசூர்மௌலானா வீதி,**
**மருதமுனை.**

அட்டைப்படம்
**மூபா**

முதற்பதிவு
2015.10.10

அச்சுப்பதிவு
**அப்னா பிரிண்ட், மருதமுனை.**

இணையத்தளம் :
**www.noufallanka.org**
தொலைபேசி : 077-6009247
மின்னஞ்சல் :
**nawfalds@gmail.com**

விலை : 250/=
ISBN : 978-955-42405-1-3

# *Mithakkum Kanawukal*

*Poems*

Author
**M.M. Noufal** (SLPS, SLAS)

Copyright
**M.M. Mihlar, Maruthamunai.**

Published by
**Aysha Publication**
520, Mashoor Moulana Road,
Maruthamunai - 03.

Cover Design
**MOFA**

First Published
**2015.10.10**

Printed by
**Abna Print, Maruthamunai.**

Web site :
**www.noufallanka.org**
Phone : 077-6009247
E mail :
**nawfalds@gmail.com**

Price : 250/=
ISBN : 978-955-42405-1-3

எனது மூத்தம்மா
தங்கம்மா என்று அழைக்கப்பட்ட
கதீசா உம்மா (புலவர் மணியின் மூத்த தங்கை)
அவர்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம்!

## நன்றிகள்

மனத்துள் இருந்த எண்ணங்களை
எழுத்துருவில் கொண்டு வந்து
அதனை தட்டச்சு செய்ய உதவிய ஐ.எம். முஸம்மில் (ஓட்டமாவடி)
மற்றும் இக்கவிதைகளைப் பார்வையிட்டு
ஆசுபடுத்தி உற்சாகப்படுத்திய கவிஞர்களான
சத்தார் எம். பிர்தௌஸ், எம்.பி. அபுல் ஹசன் மற்றும்
எம்.எம். விஜிலி அவர்களுக்கும்
மனமார்ந்த நன்றிகள். நான்கு வரிகளில் என்னை வரைந்து
பின்பக்க அட்டையில் என்னைப் பதிப்பதற்கு உதவிய
போட்டோ றியோ - ஓட்டமாவடி உரிமையாளர் அவர்களுக்கு
மனமார்ந்த நன்றிகள். மேலும் டைப் செற்றிங் செய்து உதவிய
முபா பிறின்ட் இமேஜ் - மருதமுனை உரிமையாளர்
ஏ.எச்.எம். பாயிஸ் அவர்களுக்கும், அச்சுப் பதித்த
அப்னா ஓப்செற் அச்சக உரிமையாளர் யூ.எல்.எம். நக்கீப்
அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

புதுமையாக முன்னுரை ஒன்றை எழுதி
இந்நூலை அழகுபடுத்திய சோலைக்கிளி அவர்களுக்கு
எனது நன்றிகள்.

அத்துடன் எனக்கு கடிதம் ஒன்றை எழுதி
இந்நூலுக்கு அழகு சேர்த்த அன்பு மாமா
எஸ்.எல்.எம். ஹனீபா அவர்களுக்கும்
மனமார்ந்த நன்றிகள்.

# என் மன வெளியிலிருந்து...

மனமும் இதயமும் ஒன்றா என்பதற்கான விடை தேட முற்படும் வேளை பல்வேறு வியாக்கியானங்கள் கொடுக்கப்படலாம். இதயமும் மனமும் ஒன்றெனக் கூறுவோரும் உண்டு. இதயம் உடலுக்கு உயிர் கொடுக்கின்றது. மனம் மானுட வாழ்க்கைக்கும் மனிதாபிமானத் திற்கும் வழிசமைக்கின்றது. மனமும் இதயமும் ஒன்றித்தால் உடல் இனபமாய் அமைந்துவிடும். வாழ்க்கை என்பது ஓர் இன்பமான பயணம். அப்பயணத்தில் மேடு பள்ளங்களும் குன்றும் குழிகளும் இருக்கத்தான் செய்கின்றன. எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு முன்னேறும் போதுதான் அவரவர் இலக்கினை அடைந்துகொள்ளலாம். இலக்குத் தவறுவது மீண்டும் முயற்சிப்பதற்கு உந்துசக்தியாக அமைந்து விடுகின்றது. பொதுவாக இதமான மகிழ்ச்சிக்குரிய விடயங்களை இதயத்துடன் தொடர்புபடுத்தும் வழக்கமும் துக்கமான விடயங்களை மனதுடன் தொடர்புபடுத்தும் வழக்கமும் உள்ளது. இருந்த பொழுதிலும் விருப்பத்திற்குரிய விடயங்களை மனதுடனும் தொடர்புபடுத்தி பேசுபவர்களும் உண்டு. உதாரணத்திற்கு “அவரை என் மனதுக்குப் பிடித்திருக்கின்றது” என்று கூறிக்கொள்வதை காதால் கேட்டிருக்கின்றோம். மனத்துள் இருக்கும் துக்கமும் வேதனையும் இதயத்தினுள் இருப்ப தில்லை. கலை இலக்கியங்களில் கூடுதல் கவனம் கொடுத்து மனங்களை மகிழ்ச்சிப்படுத்துவது வரவேற்கத்தக்கது. மனத்தின் அவதிகள் இலக் கியங்களில் வெளிப்படுகின்றன.

கலை மற்றும் இலக்கியங்களினால் இதயங்கள் பூரிப்படைகின்றன. அந்தவகையில் என் மன உட்பச்சையில் ஊற்றெடுத்த சிலவரிகளை இங்கு பதிவாக்கியுள்ளேன். இங்கு காலங்கள் கவிதைகளாக வழிந்தோடு கின்றன. நல்ல வாசகனுக்குத் தெரியும்தானே எது நல்லது கெட்டது என்று. முடிந்தால் வாழ்த்துங்கள். கரடு முரடாக இருந்தால் ஒதுக்கி வையுங்கள்.

**எம். எம். நௌபல்**
மருதமுனை, இலங்கை.

## இது எஸ்.எல்.எம். ஹனீபாவிடமிருந்து....

என் இனிய நௌபலுக்கு!

அனைத்து நலன்களுக்கும் பிரார்த்திக்கின்றேன். நீங்கள் என்னுடன் கையளித்துச் சென்ற "மிதக்கும் கனவுகள்" கவிதைத் தொகுப்பு கடந்த ஒரு மாத காலமாக என்னிடம் உலாத்துகிறது. தொகுதியில் 45 கவிதைகள், அத்தனை கவிதைகளும் இந்தப் பிரபஞ்சத்தையும் அதன் ஜீவராசிகளையும் உங்கள் எழுத்தெனும் விரல்களால் வருடிச் செல்கிறது.

கவிதைக்கென்று பயன்படுத்துவதற்கு பிரத்தியேகமான மொழி இல்லை என்பதையும் நாம் அறிவோம். காலாதி காலமாக நம் வாழ்வோடும் வாழ்வு சார்ந்த மண்ணோடும், நம் முன்னோர்களின் புழக்கத்திலுள்ள மொழியையே நாமும் பயன்படுத்துகிறோம்.

அந்த மொழிக்காக - அதன் ஒரு வார்த்தைக்காக தவமிருக்கிறோம் - உங்கள் மொழி - ஒரு தவத்தின் பயனோ நானறியேன். அத்தகைய மொழி - உங்கள் கவிதையின் அழகை உணர்ச்சியை ஆடை போல் போர்த்தி அலங்கரிக்கும் விதம் அலாதியானது.

ஆடையை நீக்குப் பார்த்தால் அழகும் ஆன்மாவும் உயிர் பெற்று களிகொண்டாடும் வல்லமையைக் காண்கிறேன். அத்தகைய ஏராளம் கவிதைகளை நமது மொழியில் நான் படித்திருக்கிறேன். உங்களின் "வாசித்த கவிதை" யும் அதில் சேர்த்தி.

நௌபல்!

உண்மையில் கவிதை பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனாலும் நான் கவிதையின் வாசகன். தற்காலத்தில் நல்ல கவிஞர்கள் என்று பெயர் பெற்ற தமிழ் கவிஞர்கள் பலரும் எனது நண்பர்கள். உரையாடலின் இடையே பேச்சு வழக்கில் பலரிடமும் கேட்டுப் பார்ப்பேன். கவிதை என்றால் என்ன? யாரும் உருப்படியான பதிலை சொல்வதாகவும் இல்லை. ஆனாலும் நல்ல கவிதையைத் தேடியே எனது பயணம் தொடர்கிறது. என்னைப் போல் பலரும் -

ஒரு தொகுதியில் உயிரோட்டமுள்ள நான்கு வரிகளைக் கண்டடை வதற்காக நாற்பது கவிதைகளையும் சளைக்காமல் வாசிப்போம். பொதுவாக, பெரும்பான்மை இலக்கியவாதிகளின் கருத்துப்படி கவிதை என்பது அனுபூதி நிலை அனுபவம் என்பார்கள். கவிதை இந்த உலகின் எந்த ஒரு அற்பமான பயன்பாட்டிற்காகவோ வேறு காரணங்களுக்காகவோ செய்யப்படுவதல்ல. அது ஆரவாரமிக்க இந்த இரைச்சலிலிருந்தும் விடுபட்டு தனக்குத் தானே முழுமை அடைவது என்போமா? ஆனாலும், இந்த உலகின் மிகச்சிறந்த கவிதை என்பது, முழுமையைத் தேடும், தொடும் முற்றுப்பெறாத ஒரு தேடலாகவே எனக்குப் புலப்படு கின்றது.

நௌபல்!
உங்களின் பல கவிதைகள் என்னுடைய பார்வைக்குள் அரவணைக் கப்படுகின்றன. நெஞ்சிற்குள் நெருக்கமாக வளர்கிறது. எந்தெந்த கவிதை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்பவில்லை. தேர்ந்த வாசகன் தெளிந்துகொள்வான். கவிதையின் வாசகன், கடவுளின் வாசகன், மொழியின் உபாசகன்.

எனவே கவிதை என்பதே மொழிதான் இங்கே உங்கள் எழுத்தில் ஒரு மொழி இரத்தமும் சதையுமாக அலைந்து கொண்டே இருக்கிறது.

அலைச்சலில் தீராக்காதல் கொண்டவர்களுக்கு - கவிதைச் சோலையில் அலைந்து அளைந்து திரிவதில் அலுப்புத் தட்டுவதே இல்லை அல்லவா?

நண்ப!
என்னைச் சமச்சீர் செய்கின்ற கவிதைகளை விடவும் - என்னைக் குலைத்துப் போடுகின்ற கவிதைகளையே நான் பெரிதும் விரும்பி வாசிப்பவன். நாம் விரும்புகின்ற பெண்ணை விடவும் நம்மை நேசிக்கின்ற பெண்ணின் காதலும் காமமும் போல. நம்மைப் புரட்டிப் போடும் வல்லமையுள்ள எழுத்துக்களே. முடிவில் நம்மை புடம்போடும் தீயின் நாக்குகளாகும்.

இன்று கவிதையும் உலகமயமாக்கப்பட்டிருக்கிறது. உலகின் புகழ்பெற்ற மொழிகளின் கவிதைகளையெல்லாம் தமிழில் படிக்கின்ற பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

எமது தமிழ் மொழிக்கவிதையும் வேறு வேறு மொழிகளில் தரிசனம் தருகிறது. முழுப் பிரபஞ்சமும் கவிதைகளால் வடிவமைக் கப்பட்ட இந்த நாளில் நௌபலின் "மிதக்கும் கனவுகள்" உலகக் கவிதை என்னும் தோரணத்தின் ஒரு குருத்தோலையாகி - எனக்குள் களிகொண்டாடுகிறது.

நான் காற்றில் மிதக்கிறேன்...

வாழ்த்துக்கள் என் இனிய நௌபல்!

அன்புடன்,
எஸ்.எல்.எம். ஹனீபா மாமா

“மிதக்கும் கனவுகள்” நௌபலின் இரண்டாவது கவிதைத் தொகுதி. “மாம்பழக் கொச்சி” என்ற முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டு மிகக் குறுகிய காலத்திற்குள் மிதக்கும் கனவுகள் வெளிவருவதில் இருந்து கவிதையில் இருக்கும் இவரின் ஆர்வமும் அக்கறையும் நமக்குப் புலனாகிறது.

மாம்பழக் கொச்சியை விட “மிதக்கும் கனவில்” கவிதைகள் மீதான இவரின் பார்வை விரிந்திருக்கின்றது. பாடு தளமும் அகன்றிருக்கின்றது. ஒரு மரம் தளிர்விட்டு வளர்வதைப் போன்று கவிஞர் இதில் இலை விட்டிருக்கின்றார்.

கவிதை உரம் போட்டு வளர்க்கின்ற ஒன்றல்ல “மனம் போட்டு வளர்ப்பது” மனதிலிருந்துதானே கவிதை எழுகின்றது. கவிதை வேரோடும் மண் நமது மனம்தானே அதுதான் நான் சொல்வேன்.

மனம் அழகாக ஆக கவிதையும் அழகாகும். கவிதையின் பிரகாசம் அதைப் படைத்த கவிஞனின் மனதின் பிரகாசம்தான். நமது மனதை அழகாக்கும் பணியையும் கவிதை புரிகிறது. இது ஒன்றே போதும் கோடரியைத் தூக்கி கவிதை சமூகத்தை கொத்திப் புரட்டி போடாது விட்டாலும்.

இந்தத் தொகுதியைப் பார்த்தால் கவிதை பல இடங்களில் உட்கார்ந்திருக் கிறது. இது ஒரு கவிஞனுக்குக் கிடைக்கும் பாக்கியம் தான். பலர் தங்கள் படைப்புகளில் கவிதையை உட்கார வைக்க என்ன பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம் தானே!

கலை பல இடங்களில் இவரது கவிதைகளில் பூத்துக்கிடக்கிறது. கலை பூக்கும் தோட்டம் கவிதையல்லவா! பலரது படைப்புக்களில் பொன்னாங்கண்ணி கூட பூப்பதில்லை. சும்மா சுவரில் கிறுக்குவதைப்போல் கிறுக்குவதற்கு ஒரு கவிஞன் தேவையுமில்லை. ஆகாயத்தைப்போல கவிதையை உயரமாக்கி நமக்கு ஆச்சரியத்தை ஊட்டுவது கவிதையில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற உணர்வுகள்தான். அது இந்தத் தொகுதியில் உயிருடன் இருக்கின்றது.

அப்படிப்பட்ட கவிதைகளைத்தான் வாசித்து வாசித்து பிறரும் முளை விடுகின்றனர். சிலரை முளைக்க வைக்கும் திறனைக் கூட “மிதக்கும் கனவுகளில்” காணலாம் என்று மட்டும் சொல்லிக் கொள்வதுடன் இவரது கவிதைகளை வரி வரியாக எடுத்து “மளிகைக் கடை” விலைப்பட்டியலைப் போல ஒரு முன்னுரை எழுதுவது நமக்கு ஒத்துவராதப்பா! என்னை விடுங்கள்.

- சோலைக்கிளி

## பீடிகை

சின்னஞ் சிறு தீவினிலே
நாற் கோடிகளிலுள்ள எல்லோரும்
உடன் உறைந்து ஒன்றித்து
உண்டு குடித்து ஒரு வாழ்வாகி
ஓர் தாய் வயிற்றுப் பிள்ளைகளாய்
மீள் இணக்கம் என்று சொல்லி
ஏன் வாழக் கிடைக்கவில்லை?

## கனவின் பதிவுகள்

# உள்ளே....


| | | பக்க எண் |
|---|---|---|
| 01. | சிசுவின் உயிர்ப்பு | 01 |
| 02. | நிலவுக்குப் பதில் நீ | 03 |
| 03. | சூரியன் அழுத நாள் | 04 |
| 04. | தூவானம் | 06 |
| 05. | மௌனம் கலைகிறது | 08 |
| 06. | மகரந்த மணிகள் | 10 |
| 07. | சாயங்கள் பூசியவர்கள் | 12 |
| 08. | கவிதைகளின் பதிவு | 14 |
| 09. | முகமூடி உலகம் | 16 |
| 10. | புழுதிக் குளிப்பு | 18 |
| 11. | ஒலிப்பேளை | 20 |
| 12. | போலியான நாட்டுப்பற்று | 22 |
| 13. | கனவுகளால் நெசவு | 24 |
| 14. | அரச சேவை இவர்கள் | 25 |
| 15. | மீண்டும் அவள் | 27 |
| 16. | சுவரில் முகங்கள் | 29 |
| 17. | மிதக்கும் கனவுகள் | 31 |
| 18. | வாக்குறுதிகள் | 33 |
| 19. | நீ | 34 |
| 20. | பசுமை படர் நாட்கள் | 35 |
| 21. | பூமிப் பெண் | 37 |
| 22. | மூத்தம்மா | 38 |
| 23. | வெற்றுக் கோசங்கள் | 39 |

| | | பக்க எண் |
|---|---|---|
| 24. | வனத்தின் அழகு | 41 |
| 25. | மீன்களின் அறுவடை | 43 |
| 26. | தலைப்புப் போடுங்கள் | 45 |
| 27. | வாசித்த கவிதை | 46 |
| 28. | ஆகாயத் தோட்டம் | 47 |
| 29. | கனவுத் தொழிற்சாலை | 48 |
| 30. | மழை வெள்ளம் | 49 |
| 31. | கனவில் நீந்தும் | 51 |
| 32. | எறும்புகள். | 52 |
| 33. | மாலைக் கருக்கலில் | 53 |
| 34. | வட்டா | 54 |
| 35. | யாக்கையின் புன்முறுவல் | 55 |
| 36. | மழை | 57 |
| 37. | திருமணம் | 58 |
| 38. | விதைகள் | 59 |
| 39. | இன்னுமொரு மாம்பழக்கொச்சி | 60 |
| 40. | காத்திருக்கும் இவர்கள் | 62 |
| 41. | எம் தலைமைகள் | 64 |
| 42. | கவிதைகள் | 65 |
| 43. | மாயக்கண்ணாடி | 66 |
| 44. | தூது | 67 |
| 45. | ஏதிலிகள் | 68 |
| ● | ஆயிஷா வெளியீட்டகத்தின் ஏனைய வெளியீடுகள் | 70 |
| ● | கடைசிப் பக்கச் செய்தி | 71 |

கனவு ஒன்று

## சிசுவின் உயிர்ப்பு

மாயத் திரைக்குள் நீந்தும் வெண் பனிகள்
குருதிக் குமிழிகளால் பல வர்ணக்கோடுகள் இட்டு
பொதுப்பாலில் உருவாகும் சிறிய அங்கி
வெண் முத்துக்களாக மாறும் அதிசயம்

மௌனம் கலைந்த கருவறை அமாவாசையில்
ஊசிக் குழாய்களில் இரத்ததானம் நிதமும்
நாளொரு மேனி வளர்ந்து வரும் குருதிப் பொட்டலம்
மறைந்து கிடந்து பல புத்தகங்கள் படிக்கும் குறை காலச்
சிசு
பனி வாடையில் நிதமும் குளித்து
பத்துத் திங்கள் பல கலைகள் அறிவு பெற்று
அவயங்கள் உயிர்ச்சத்து உணர்வுகள் ஒன்றாகி

வானமிது அன்பு மழை பொழிந்து
பூ ஒன்று ஜனனிக்க எதிர்பார்த்து நிற்கும் தாய்மை
பல்வேறு அரண்கள் செய்து
பள்ளி கொள்ளாமல் பல நாட்கள் தியாகஞ் செய்து
பல தினங்கள் நினைந்துருகி மௌன உருவம் செய்து
வண்ணக்கனவுகளை தன் மடியில் புதையக் கண்டு
தன் மூச்சைக் கொடுத்து இறுதி வரை காப்பாற்றி
குருதியை உணவாக்கி தினமும் உயிர் கொடுத்து
கனவுகளை உயிர்ப்பிக்கும் ஒரு சமூகப் பிராணியாய்

வெறுமையில் நிழலில்லா உயிர் சமைத்து
நீரில் மிதந்தபடி தனிமையில் கிடக்கிறது
மாய உயிர் கருவில் உட்கார்ந்து வெளிவரும் நாளில்
ஓயா மகிழ்ச்சியின் பம்பரங்களின் காட்சியில் தாய்மை

இளையோடிய முகத்தில் குழந்தையின் அழகு தெரிய
தம்பதிகளின் எச்சங்களாக பிரசவிக்கின்றாள்
நம்பிக்கை பிறக்கின்றது

*- 2 ஜனவரி 2013*

நௌபல்

கனவு இரண்டு

## நிலவுக்கு பதில் நீ

நிலவுக்குப் பதில் முகமாய் நீ நின்று
மனத்துள்ளிருந்து ஓடிப்பாடும் என் பால் வண்ண நிலவே
என் மன நீர்ப் பெருக்கில் நனைவதற்கு
உன் பாய்ச்சலை எப்போது நாடிவருவாய்

வரும் வெளி கண்டு மனம் இன்புற்று
காய்தலும் உவத்தலும் நமக்குள் இருந்ததென்று
வேலிக்கு மாவரை போட்டது போல்
நமக்குள் நல்லுறவை ஆழ்மனதில் விதைத்திருந்தாய்

இதயத்தில் நீந்திச் செல்லும் பட்டாம் பூச்சி அழகில்
சிறகடித்துப் பறக்கின்றாய் என் இதய வெளிகளில்
எருமைச் சவாரியில் என்னுடன் கலந்து சென்ற நீ
மகிழ்ச்சி வலையில் சிக்குண்டு இன்புற்றாய்

வயல் வெளியின் சிட்டுக் குருவியாய் பாடிப்பறப்பதும் நீயே
காட்டருவியின் சிரிப்பொலி உன் சிரிப்பு
நீர்ப்பறவைகளின் நல்லிசைவில் உன் நளினம்
ஓடி மறையா உன் நினைப்பு இன்றும் என் நெஞ்சில்

விஷம் உறுஞ்சும் கல் போன்று உன் நெஞ்சம்
ஆழ் நெஞ்சின் பெயர்க்கல்லாய் எனை நீ பதித்து
அன்பலையில் ஊஞ்சல் கட்டி என்னை ஆடவைத்து
வாழ் முழுவதும் காத்திருக்கும் பெண் அரசே
நான் வரும் வரை

 22 ஜனவரி 2015

கனவு மூன்று

## சூரியன் அழுத நாள்

சூரியன் அழுத நாள் இன்று வழமைக்கு மாறாக
சூரிய மண்டலத்தின் பெரு வெளியில்
சுவாலையை விசிறி அழுத தீச்சுவாலை
மழையாக உலகமெங்கும் பரவியது
கதிரவன் தனது பிடியை அதிகரித்துக்காட்டிய காலம்

ஆஹா சூரியன் அழுத நாள் இன்று.
மழை தனது கடமைக்கு விடுமுறை கொடுத்த காலம் இது
வெயிலின் அதிதீவிர சிரிப்பு பால் வெளியில் படர்ந்திருந்தது
குடியிருப்பு வெளிகளில் வளியின் உணர்வு மிகுதியால்
பவனம் கோபித்து பரவிக்கிடக்கிறது

ஆஹா கதிரவனின் அதி தீவிர சிரிப்பு.
தாவரங்கள் செடி கொடிகள் நீருக்கு ஏங்கி
வாடி வதங்கி உயிரற்ற காட்சி அது
மரங்களெல்லாம் ஆடை களைந்து நிர்வாண நிலை
மனிதர்கள் போல் வெயில் காலத்தில் இப்போது

ஆஹா தாவரங்கள் ஆடை களைந்த நிலை.
பூமியின் தியானம் கலைந்த நிலை
பூமிப்பெண் சூட்டினைப் பருகி கவலை கொண்ட பொழுதின்
அடைந்திருந்த ஊர்வன அனைத்தும்
உலகம் பார்ப்பதற்கு மேற்பரப்பில் வந்த நிலை

ஆஹா பூமியின் தியானம் கலைந்த நாள்.
பெரு வெளியின் பவனம்
திக்குமுக்காடி ஈரலிப்புக் குறைந்து
வெயிலின் சிரிப்பின் வலிகளை
இலைகள் தாங்காது
ஒவ்வொன்றாக உதிரும் பருவகாலம்
பயிர்களின் உடலில் நீர் வற்றியதால்
தாகம் அதிகரித்து துவண்டு போன பருவம்
இத்தனையும் மனிதர்களுக்கும் தான்

பாவம் மனிதர்கள் தாவரங்கள் விலங்குகள்

*□ 8 பெப்ரவரி 2013*

கனவு நான்கு

## தூவானம்

தூவானம் தந்த மகிழ்ச்சியில் நான்

சுட்டு விடும் சூரியனின் கதிர்களை மறைத்து
தூரத்தே இருந்து வரும் சாரல் மழை
பூமியை நனைத்து
வாசலெங்கும் நீர்த் தோட்டம் படர்ந்திருந்தது

அந்தி சேருமிடம் இருந்து கொண்டு
கைகள் நீண்டன மழையில்
நனைந்து இன்பம் பெற
கால்கள் நீண்டு
ஈரத்தில் பட்டு விட ஆர்வமாயின
ஆயினும்
தூவானம் தந்த மகிழ்ச்சி
மட்டிட முடியவில்லை

அந்தி நிலா வந்து வந்து போக
மழை முகில்களும் கார் கறுப்பும் காரணமாயின
தொட்டு விடும் தூரத்தில் சூரியனின் மறைவு
சின்னஞ் சிறுசுகள் நீர்க்காட்டில் பாய்ந்து
துள்ளி விளையாடி மல்லுக்கட்டினர் வாசலில்

வீடு முழுவதும் குளிர்ந்த தன்மை பரவியிருந்தது
தூவானம் நாலா பக்கமும் இருந்து
வீட்டுக்குள் ஊடுருவி சிறகு முளைத்துப் பறந்தன
மின்சாரத் துண்டிப்பில் எறிந்து வி[illegible]
பொருட்களை தேடிக் கண்டு பிடிக்க[illegible]
மட்டான இருட்டு அது
மார்புத் தலத்தின் தேடல்
நாவு அடைத்த நிலை

மகிழ்ச்சியின் சீதளக் கரங்களில்
பொய் வாழ்வின் சௌகரிய மாயையில் வீழ்ந்து விட்டோம்
தூவானம் தொடர்ந்து பரவியது வீடு முழுவதும்
கரு உயிர்ப்பின் முயற்சியில்
யாக்கைகளின் விருப்பில் இணங்கி
பரிசுத்தமடைந்தோம் வழமை போல்

தூவானம் ஓர் இன்ப ஊற்று

19 பெப்ரவரி 2013

கனவு ஐந்து

## மௌனம் கலைகிறது

மௌனம் ஒரு காற்றாய்
வெறுமையாகப் படிந்திருக்கிறது
பரந்த வெளிகளில்
சுயமை இழந்த பனித்துளிகள் போல்

புன்னகையால் வீக்கமடைந்த இதயங்கள்
மௌன மொழிகள் பேசி
வலியின் வடிவங்கள் மறந்து
புதைந்து கிடக்கின்றன

உதடுகள் பதிக்காமல்
செய்தியை வெளிப்படுத்தும் மௌனம்
தொடர்பு மொழியில் ஆக்கிரமித்து நிற்கின்றன
பொது மொழியாக

அடிமைகளின் மொழியாகி
உரிமைகள் மலடாக்கப்படும் போது
பேச்சுக்கள் மௌனிக்கப்படுகின்றன

சம்மதத்தின் ஓர் குறியீடாய்
வாழ்நிலை பற்றியும் ஒரு சமிக்ஞையாய்
பொறுமையின் ஓர் அடையாளமாய்
மௌன மொழி அசைகிறது எனைக்கடந்து...

மெல்ல தொலைந்து போகின்றன மௌன மொழிகள்
மௌன வாசல் திறப்பதனால்
கேள்விகளுக்கெல்லாம் பதிலாய்
மனங்களின் உபசரிப்பில்

பேச்சு மழை.

 12 மாச்சு 2014

கனவு ஆறு

## மகரந்த மணிகள்

பல முறை உடைந்து மீண்டும் ஒட்டும் மகரந்த மணிகள்
காற்றின் துணை கொண்டு ஊசலாடுகின்றன பூக்களின் அசைவில்
மௌனப் பூச்சிகள் மகரந்தங்களை நுகர்ந்து
பறவைகளின் இடுக்கல்களால் பிறந்த பூவிது

வெளிச்சங்களால் சிதறிக் கிடக்கும் பனித்துளிகள்
தங்கிக் கொள்வதற்கு ஏற்ற இடமாய் பூவின் வாசலில்
பொதுப் பாலில் நிறங்கள் தூவி
பூ மகள் பூத்துக் குலுங்குகிறாள் மௌனமாய் நின்று

கண்டவர்கள் காமத்துடன் உற்று நோக்க
சில்வண்டுகள் சினத்துடன் சீண்டிச் செல்ல
மௌனம் கலைந்த புன்னகையால் அனைவரையும் ஆசுபடுத்தி
காத்திருக்கும் வண்ண மகள் பல நிறங்கள் பூசியவளாக

இரகசியங்களை உள்வாங்கிக் கொள்ளும் பூக்களின் தண்டுகள்
துயர்படிந்த மகரந்த சிறகுகள் பரவிய நிலையில்
அந்நியர் பற்றி கவலை கொள்ளாமல்
தேனை நிரப்பி பரிமாறுகின்றன நிதமும்
தொடர் மொழி தெரியா பூவிலான கவிதைகள்

வழுக்கி விழும் மகரந்தச் சொட்டுக்கள்
யோனிகளின் மடிகளுக்குள்
இன்னுமொரு மகரந்த மணிகளுக்கு அடித்தளமாய்
காலமென்னும் சகடவோட்டத்தில்
தாவிப் பறக்கின்றன
வண்ண நிலவுகளின் வெளிச்சத்தில்

காற்றால் பூக்கள் பிறக்கின்றன.

 22 மார்சு 2013

கனவு ஏழு

## சாயங்கள் பூசியவர்கள்

இரவு தனது முக மூடியைக் அகற்ற தொடங்குகின்றது
சூரியன் தனது
கோர முகத்தைக் காட்டமுற்படுகின்றான் அதிகாலையில்
கரி நிற சாயம் கலைந்து விடுகின்றது
வெயில் இரவை கவ்வும் வேளையில்

பளிங்குகளின் சாயலை ஒத்த விண் மீன்கள்
கொட்டுகின்றன வானிலிருந்து இரவில் மாத்திரம்
பொறுக்கி எடுத்து அடுக்குப் பெட்டிக்குள் வைத்து
அழகு பார்க்கின்றனர்
சின்னஞ் சிறுசுகள்
பசி எடுத்து சாப்பிடும் வரை

முக மூடிக்கு ஏற்றாற் போல அசைவுகள் ஒவ்வொருவருக்கும்
குறு நடை பாய்ச்சல் வேக நடை எனப் பலவகை
முகங்களிலும் சிரிப்பு குறு நகை புன்னகை
விகாரம் என்று பலவர்ணம் பூசி உலா வருகின்றனர்

ஊர்வனங்களும் ஓய்வெடுத்துக் கொள்கின்றன
பகல் பொழுதில் சாயங்களைக் களைந்து
இரவு மனிதர்கள் போன்று நிறமில்லாமல்

பூட்டுப் போட்ட மனிதர்கள் வாய்களுக்கு
முகமூடி மனிதர்களாக நடமாடுகின்றனர்
வாய் முடக்கம் பணிக்குத் தடையில்லை என்பது போல்
பொய்யுதிர்ப்பதில் மட்டும் வாய் நிர்வாணமாகின்றது

நரம்பில்லா நிர்வாண நாவினால்
எத்தனை பேச்சுக்கள் விடுதலை தொடர்பாக
அத்தனையும் பொருள் தேடும் முயற்சிதான்
நிஜம் பற்றியும் சமூக அவலங்கள் பற்றியும்
பேசுவதற்கு தயக்கம் சமூக ஆர்வலர்களிடத்தில்
மாண்புறும் தலைவர்கள் பெயரளவில்

நிறங்களால் தங்களது உடல்களை மறைத்து
சாயங்களைத் தங்களது முகங்களில் விசிறியவர்களாக
பொய் உழைப்பிலும் சிவப்பு
கறுப்பு
பச்சை
நீலம் என்று பல வர்ணங்கள்
நிறங்கள் கரைந்து விடுகின்றன
பொய் முகங்கள் விலக்கப்படும் போது
சாயங்கள் நிலைத்திருக்கும் உண்மை முகங்களுக்கு மாத்திரம்

5 ஏப்ரல் 2014

கனவு எட்டு

## கவிதைகளின் பதிவு

சொல்லப்படாத வார்த்தைகள்
முடங்கிக்கிடக்கிறது தொண்டைகுழி வரை
குழந்தைக்கான பிரசவ வேதனை போல
சூன்யமயமான மனச் சுவர்களில் தங்கியுள்ளன
பதிவுக்கு வரும் வரை கவிதை என்னும் பெயரில்

சிணுங்குகின்ற இரவின் சிந்தனைத் தளத்தில்
வரவுக்காய் காத்திருக்கும் கவிதைகளின் பதிவுகளுக்கு
கனவுகளிலும் சிந்தனைகளினதும் தெறிப்பொலியாகி
நடு நிசி வெளிச்சங்களில் சிறகடித்துப் பறப்பதற்கு
காத்திருக்கின்றன வார்த்தைப் பறவைகள்

நவீன சிந்தனைகளாக வழிந்தோடப் பார்க்கின்றது
மனக் கண்ணின் கசிவுகள்
கவிதைகள் நீரூற்றுப் போல

பிரளயமாக ஓடும் நல்ல கருத்துக்கள்
மீன்களாக நீந்தி விளையாடும் வனப்பான கவிதைகள்
மீன்களின் மூச்சுக்களும் பறவைகளின் நிழல்களும்
மனத்தின் கசிவுகளுக்கு அழகு சேர்க்கும்

காலம் கவிதையாக வழிந்தோடுகின்றது
நல்ல வாசகர்களின் பொறுப்பு வலைகட்டி
தெரிந்தெடுப்பது நன்கு முதிர்ந்தவைகளை
கடலில் நீராடி முத்துக்குளிப்பது போல்

சிறந்த பதிவுகளாய் காலம் அமைந்திருக்கும் அதிகாலை
சூரியன் உதயத்தில்
அனைத்துக் கவிதைகளும் அதிகாலைக் கீற்றுக்களில்
சூடாக்கப்படுகின்றன அச்சுக்குப் போகும் வரை

மிதக்கும் கனவுகள் ஏடுகளில் கவிதைகளாக
உலாவருகின்றன சிறந்த பதிவுகளாக

 16 ஏப்ரல் 2013

கனவு ஒன்பது

## முகமூடி உலகம்

வரிசை வரிசையாக கோடான கோடி மானுடர்கள்
சிரிப்பு, புன்னகை, கோபம் என்று பல
முகங்களில் குறிகாட்டிகள்
ஒவ்வொருவருக்கும் சுபாவங்களுக்கு என்று ஒருமுக மூடி
வயோதிபர், இளைஞர், குழந்தை என்று
தோற்றத்தின் பால் இன்னுமொரு முக மூடி
குணத்துக்கென்று மற்றுமொரு முக மூடி

உண்மை வெளிப்படும் முக மூடி களறப்பட்டால்
முகத்திற்கும் முகமூடிக்கும் சம்மந்தமில்லை
பாம்பின் குணத்தைப் போன்று
அனேகம் பேர் பல முக மூடி கொண்டு
ஏமாற்றும் சந்தர்ப்பங்கள் ஊரை
முகத்தை நம்புவதில்லை நம்மில் பலர்
முக மூடியைத்தான் நம்புகிறார்கள் என்றென்றும்
சுய நலம் பரவிக்கிடக்கின்றன
குடியிருப்பு வெளிகளில் நிதமும்
நாடகங்கள் பலித்துப் போகின்றன
முகமூடிக்காரர்களின்

உயிருள்ள முகங்கள் சிலதுதான்
மூச்சும் பார்வையும் ஒன்றுதான் முகங்களில்
அனைவருக்கும்
வித்தியாசம் முகபாவனைதான்
கவிதை முகம் எனக்கு என்ற மகிழ்ச்சியில்
விழித்தேன் தூக்கத்திலிருந்து
கனவில் நீந்துவதை நிறுத்திக் கொண்டு

முக மூடி போட்ட நாடக மேடை இவ்வுலகம்.

□ 14 மே 2013

கனவு பத்து

## புழுதிக்குளிப்பு

அந்திப் பூ தன் உடை அகற்றி
மாலையை வரவேற்று
உதிர்ந்து கிடக்கிறது மண் மீது
சிறு குருவிகள் சிறகு விரித்து
பாடி பட படத்துப் பறக்கிறது
மரங்களின் தோள் மீது
இறகுகள் வந்து விரிகிறது உயிருடன்

மாலையானதும்
புவியின் மேற்பரப்பில் புழுதி
தன் வாழ்வைப் பரப்பிக்கிடக்கிறது
காற்றின் திசைக்கேற்ப
தான் விரும்பியபடி ஆடி அசைந்து
படிகின்ற மண்படை
காத்திருக்கின்றது குருவிகளின் வரவுக்காய்

சிறு குருவிகள் படபடத்து நீந்துகின்றன
புழுதி புரளும் மண் வயலில்
இறக்கைகளின் வலு சேர்க்க
அலகு புதைத்து
இறகு கோதி
உடலைத் தீட்டி
சுழியோடி நீந்திக் கிடக்கின்றன மண்ணினூடே
போதும் போதும் என்ற மகிழ்ச்சியில்
பின்னர் அதாகவே
எழுந்துபறக்கின்றன கூடு நோக்கி

காற்று தன் தாய்வளி திசை கொண்டு மீண்டும்
பனிபோல் படர்கிறது புழுதி ஆறு
உக்கிப்போகும் அனைத்துமே புழுதியாய்

நல்ல குளிப்பு இன்று குருவிகளுக்கு

 25 மே 2014

கனவு பதினொன்று

## ஒலிப்பேளை

ஒலிப் பேளையில் மறைந்து கிடக்கும் சாரீரம்
இயந்திரத்தின் அதிசயத்தில் பிரசவிக்கும் இசை குழந்தைகளை
இறை மொழி பொது மொழியாக உலகத்தாருக்கு
கல்லையும் கரைக்கும் தேனருவியாம்

மனங்களின் தூய்மைக்கு வழிகோலும்
காற்றால் தூக்கிச் செல்லப்படும் சாரீரங்கள்
பெரு வெளியில் சங்கமித்து தொடர்பு படுத்தும்
மானிட வர்க்கத்தை மகிழ்ச்சிக் கடலில்
நினைவலையால் அசைபோட்டு நித்தம்
உறங்கா மனத்துடன் உடல் வாடி ஓய்வு பெறும்

இசைக்குள் மறைந்து கிடக்கும் சடப் பொருட்கள்
மனிதரில் உட்கார்ந்து உச்சாடனம் செய்து
விரும்பியபடி தொடர்ந்து உறவாடி
இறந்த கனவை நனவாக்கும் மந்திரக் கோல் அது
எதிர்கால வாழ்க்கையையும் தன்னிலைப்படுத்தும் ஒலி நூல்

ஆளில்லா உலகில் சஞ்சரித்து
மகிழ்ச்சிப் படிகளில் உலா வரும் இச்சாரீரம்
காற்றின் வேகத்தால் மகிழ்ச்சியுறும் இதயங்கள்
இசையின் ஊடுருவலாக உயிர் வாழ்கின்றன
காற்றின் அழுகையால் துன்பமுறும் இவ்விதயங்கள்
அமைதியடைகின்றன ஒலியின் வெளிச்சத்தில்

மனம் என்னும் பட்டாம் பூச்சி
படபடத்து சிறகடித்து பறக்கும் வானமிது
பனி வெளியில் ஊடுருவும் சக்தி மிக்க ஒலி இழையிது
பூரிப்புற்று மெய்யுடல் உயிர் பெற
உள்ளம் விரிவடைந்து மகிழ்ச்சி பெற்று
உந்து சக்தியாய் அமைந்தன ஒலிப் பேளைகள்

காற்றலையில் இயங்கிப் போகும் உள்ளங்கள்
மகரந்த துணிக்கைகளின் பருவகால விதைப்பால்
மெய்யுடல் சிலிர்த்து மரங்கள் முளைத்து
பூத்துக் காய்க்கின்றன உடலமெங்கும்

ஒலி நடந்து வருகின்றது காற்றினூடே.

*4 யூன் 2015*

கனவு பன்னிரெண்டு

## போலியான நாட்டுப்பற்று

நாட்டுப் பற்று என்னும் வாய்ச்சாடல்
சீலையால் வடிந்தோடுகிறது கொல்களம் ஒன்றுக்காய்
சொந்த தேவைகளின் நிமிர்த்தம் உச்சாடனம் செய்யப்படுகின்றன
காலத்திற்கு காலம் புதுமையான மொழிகளில்

பிரத்தியேக அடையாளங்களும் சிங்கமும் பல நிறங்களும்
பாரம் பரிய குழுக்களின் தனித்துவங்களும்
வாளேந்திய சிங்கத்தின் வீரம் நாட்டின் குறியீடாய்
பல மொழி சமூகத்தின் அடையாளம் ஏனையவைகளும்
பரவிக்கிடக்கிறது நாடு முழுவதும் திருத்தப்பட்ட கொடிகளாய்

தாய்த்திருநாடு உயிர்மை இழந்து தவிக்கிறது
கொடுங்கோலர்களின் உள் மன யாத்திரையில்
நிறங்களால் கொடுத்த அடையாளங்கள்
காணாமல் போகும் நிலை இன்று
மதிப்புக்குறையும் நிலை
பிரத்தியேக கலாசார அடையாளங்களுக்கு

உயிரோடு குதறும் நிலை உயிர்களை
வெற்றி கொண்ட மமதையால்
கணக்குக் காட்ட முடியாமல் தவிக்கும் விசாரணைகள்
பெருவெளியில் மலிந்து கிடக்கும் உரிமை மீறல்கள்
எண்ணிக்கை தெரியாத அளவில்
பெரும் சனத்திரளின் உற்சாகம்
சிம்மாசனம் இழந்த நிலையிலும்

பண்பாட்டு உறவுகள் நீர்த்துப்போயின
பல்லாயிரம் ஆண்டுகள் உரமூட்டப்பட்டு
நிலை கொள்ளப்பட்டவைகள்
ஆடிப்போகும் நிலையில் கலாசார பண்பாட்டு விழுமியங்கள்
கண்ணாடியில் தெறிக்கும் விம்பம் போல
தூய்மை நலிந்த ஆர்ப்பரிப்பு கால்களை எட்டி விரிக்கிறது

உள்மனக்கிடைக்கைகளில் படிந்திருக்கும் நாசக் கரங்கள்
வலிந்து திணிக்கும் கொள்கைகள் மற்றைய சமூகத்தின் மீது
பாழ்படுத்தும் பன்மைச் சமூக சகடவோட்டத்தினை
உயிர்பலிகளுக்கு இடம் தேடும் மஞ்சள் நிறத்தவர்கள்
அமைதி இழந்து கிடக்கிறது தாய் நாடு.

*18 யூன் 2014*

கனவு பதின்மூன்று

## கனவுகளால் நெசவு

கனவுகளால் நெசவு செய்யும் பகல் பொழுது
அவளின் வீட்டு முற்றத்தில் காத்துக்கிடக்கின்றன
நல்ல உடுமானம் ஒன்றின் சமைப்புக்காய்
அவளின் காலடியில் ஒரு கைத்தறியாக

உடுமானம் முடிந்த நிலையில்
கைத்தறிச் சாறம் ஒன்றாய் மாலைப் பொழுதில்
அவளின் மடியில் தவழ்ந்தேன்
இளைகளாக ஒன்று சேர்த்து அன்பினை எல்லாம்

மார்பில் போட்டு அழகு பார்த்து
இடையிலும் உடுத்துப் பரீட்சித்துக் கொண்டாள்
மகிழ்ச்சியில் நீந்தி கனவுகளால் பூத்துக்குலுங்கினாள்
அடுத்த நாள் விடியற் காலை வரை

காத்துக் கிடக்கிறேன் கனவுகளை நெசவு செய்ய

நிமிடத்தின் வழியாக இறந்து போகின்றன
அவளின் முற்றத்தில் நேற்றைய நினைவுகள்
இறக்கப்போகும் நிமிடங்களுக்கு வழிகோலுகின்றன
நாளைய கனவுகள்

கைத்தறியில் காதல் நெசவு.

 27 யூலை 2015

கனவு பதினான்கு

## அரச சேவை இவர்கள்

காகித மனிதர்கள் நாங்கள்
மனித மாடுகளாக வலம் வருகின்றோம்
தன் நிழலை மறந்த சூரியன் போல்
சிந்தனையற்ற சூன்ய மனிதர்களாக

அரச சேவை என்னும் புகழ்ச்சிப் பெயரில்
இறுக மூடப்பட்ட இதயங்களுடன்
வெற்றுக் குறிப்புக்களில் மாத்திரம் சிந்தனையைச் செலுத்தி
வெற்றுக்காகிதம் போன்ற மனித மனங்களுடன்

நடத்தைக் கோலங்கள் வேதம் என்று
தன்னைப்பற்றி எதுவும் தெரியாது
எப்போதுமே அடுத்தவர்களுக்கு துதிபாடுபவர்களாய்
வலம் வருகின்றனர் அரச செலவில்

மனப்பாங்கு விருத்தியில் பாலைவனமாக
எழுத்துக்களை அச்சொட்டாய் மனங்களில் வருடி
சூனியமான காகிதங்களில் கணக்குகள் உச்சாடனம் செய்து
காத்திருக்கும் இவர்கள் தூர இடத்திலிருந்து அனுமதி வரும் வரை

காற்றில் விளையும் உணர்வுகளுக்குக் கூட பயன்படாமல்
உள் மன அழகினைக் கூடத் தெரியப்படுத்தாமல்
வெறும் சதைப் பிராணிகளாக வாழ்ந்திருக்கும் இவர்கள்
மனதுக்குப் பிடிக்கா மாயாஜாலங்கள் செய்யும்
இதயங்கள் கொண்டவர்கள்

தன்னறியாப்படிப்புக்கும் செய்யும் தொழிலுக்கும்
கானல் நீர்த்தொடர்பு அரசின் ஏற்பாட்டில்
அலுவலக நேரத்தில் தொழிற்பாடு ஏதுமின்றி
களைத்து விடுகின்றனர் பல நேரங்களில்
வேலைக்குறைவினால்

ஆரோக்கிய மூளைக்குள் குடையும் சிந்தனைகள்
காற்றில் எழுதிய புத்தகங்களாக
பயனற்றுக்கிடக்கின்றன மனங்களுக்குள்
ஓய்வைப் பதிவு செய்யும் வரை.

*9 ஆகஸ்ட் 2013*

கனவு பதினைந்து

## மீண்டும் அவள்

வானம் அழுது நனைந்து போகும் நான்
மீண்டும் காய்ந்து போகின்றேன் சில நிமிடங்களில்
கதிரவனின் வெளிச்ச வலையின் தெறிப்பால் மீண்டும் மீண்டும்
மேற்றிசை அந்திவானில் நிறங்கள் பூசப்படும் வரை

அவளின் சிரிப்பொலியில் கரைந்து விடுகின்றேன் தினமும்
காணாமல் போகின்றேன் சிரிப்பொலியில் சொட்டுச் சொட்டாக
நனைவதும் காய்வதும் கரைந்து விடுவதையும்
வாலாயமாக ஆக்கிக் கொண்டேன் தினசரி கனவில்

கடற்கரை ஓரத்தில் வெள்ளிச் சிதறல்கள் அவளின் புன்னகையால்
கரைந்து மீண்டும் ஒன்று சேர்கின்றன தினமும்
கரை நீண்டு பாம்பு போல் வளைந்து அசைகின்றது
படமெடுத்து வெள்ளிக் காசுகளைத் துப்பிவிடுகின்றன

பட்டு மணலில் அவளின் பாதத்தடங்களை
கண்டு கொள்ளும் வாய்ப்பு மீண்டும் கிடைத்த மகிழ்ச்சியில்
கடற்கரை எங்கும் தேடி ஓடும் நிலை ஆவலாக
இப்பூவுலகிற்கு மீண்டுள்ளாள் என்னைப் பார்க்கவே

அவளும் தனது முகத்திரையை அணிந்து
எட்டிப் பார்க்கின்றாள் கடல் சாளரத்தில் நின்று
பல்வேறு முக மூடிகளுடன் மனிதர்கள் நிஜத்தில்
வேக வேகமாக கடலின் ஓரங்களில்
மீன்களின் வாலில் குந்திக் கொண்டு ஸ்பரிசத்திற்காய்

கடல் நடுவே அடையாள அட்டை மனிதர்கள்
மத்தியில் அவளும் தான் நீந்துகின்றாள்
மீன்கள் அழுகின்றன மனிதர்கள் போன்று
அடையாளம் காணமுடியவில்லை
யார் மீன்?
யார் மனிதர்?

 19 ஆகஸ்ட் 2015

கனவு பதினாறு

## சுவரில் முகங்கள்

வானத்தின் மீது விண் மீன்கள் உறவாடி
இரவுகளின் அஜீரணம் விடியலாகின்றன கீழ்த்திசையில்

விலங்கிடப்படாத சிறை வைப்பில் மானுடங்கள் இரவுகளில்
நீருக்குள் மீன்களின் அழுகையோடு
எஜமானர்கள் உடல்களை காட்சிப்படுத்துகின்றனர் இரவுகளில்
வீசி எறியப்பட்ட உடலங்கள் சாலை நெடுகிலும்

சுவர்களில் தொங்கிக் கொண்டிருக்கும் முகங்கள்
சேமித்த கனவுகளுடன் மகிழ்ச்சியில் காத்திருக்கும் புகைப்படங்கள்
பசையில் ஊறிப் போன மனிதர்கள் தெருவோரங்களில்
ஆயிரம் கதைகள் சொல்கின்றனர்

முகங்களின் வெடிப்புகளில் கறுப்புச் சாயம் தெளித்து
சமூகத்தின் குறி காட்டியாய்
அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற இவர்கள்
வார்த்தைகளால் பேசாமல் சமூக ஏமாறிகளை குறிவைத்து
கண்களால் சிறைப்படுத்தி இதயங்களை மேயவிடுகின்றனர்

விடியலுக்கு முலாம் பூசிய அதிகாலை
காகம் கரைந்து போன தெரிவினில்
சூரியனின் குளிப்பில் தெருவெல்லாம் நனைந்து போக
மாசில்லா மனிதர்களின் வரவுக்காய் காத்திருக்கின்றன

சுவர் என்னும் பெரு வெளிகளில் முகங்கள் சங்கமிக்கின்றன
காற்றடைக்காத உடலங்கள் தெரிவு நாட்களில் பளிச்சிடுகின்றன
எங்கு கற்றார்களோ ஏமாற்று வித்தைகளை
ஆதலால் புதைந்து இறந்து போகின்றனர் சுவர்களில்

எமது மனங்கள் காத்திருக்கின்றன தேர்வு நாள் வரும் வரை.

 4 செப்டெம்பர் 2014

கனவு பதினேழு

## மிதக்கும் கனவுகள்

பதிவு செய்யப்படும் எண்ணங்கள் மூளையின் வெளிகளில்
கனவுகளாக வெளிப்படும் நிலை நிஜ அலைகளாக
காலம் சொட்டு சொட்டாக பதிவு செய்யப்படுகின்றது
மனித மனங்களில்
கனவுகளால் உயிர் பெறுகின்றன நிகழ்வுகள்
காலத்திற்கு ஏற்றாற் போல்

மனிதனின் கனவுகள் எண்ணங்களில் சமிப்பவை
மனங்களில் மிதக்கின்றன தினமும் ஏடுகளின் பதிவிற்காய்
அன்புச் சிறைச்சாலைகளில் கற்பனைக் கைதிகளாக
நேற்றைய கனவுகள் காற்றில் கரைந்து போகின்றன
எண்ணங்களும் விருப்பங்களும் பாசி போல் படர்கின்றன
மனித மனங்களில்

மிதக்கும் கனவுகளில் உயிர் வாழும் உலகமிது
சில வேளைகளில் உலகமும் கனவுகளில் மிதக்கும் ஓடம் போல்
நிறங்களினாலான கனவுகள் உற்சாகம் தருபவை நல்ல ஜீவிகளுக்கு
கனவுகளாலேயே விடிகின்றன இவ்வுலகம் நீண்ட இருளின் பின்னர்

வார்த்தைகளால் உயிர் பெறுகின்றன மௌனித்து நிற்கும் கனவுகள்
முன்னேற்றங்களுக்கு வழிகாட்டுபவை வாய்ப்பான கனவுகள்
வேலியிடப்படுவதில்லை மானுடரின் கனவுகளுக்கு
மனதின் பெரு வெளிகளில்
பதிவுகளாகும் போது வேலியிட வேண்டியிருக்கும் சமிபாட்டுக்காக

மனம் விட்டுப் பேசும் நல்ல கனவுகள் இதமாக நாள் முழுவதும்
நல்ல மனதுகள் சிறந்த கனவுகளைத் தரும் வரங்களாக எப்போதும்
சிந்தனை முத்துக்கள் கனவு என்னும் ஆலைக்குள் ஊசலாடுகின்றன
சிந்தாமல் பதியப்படும் போது மகிழ்ச்சியடைகிறது இவ்வுலகம்

சிப்பிக்குள் முத்து கனவுகள் எதிர்காலத்தின் வழிகாட்டி
மறைந்து கிடக்கின்றன சிந்தனைத் துளிகள்
வரையறை தெரியாத மனித மனங்களில்
சில கனவுச் சிந்தனைகள் சாகத்தான் செய்கின்றன

சமைக்கப்படுகின்றன வண்ணக் கனவுகள்
காலத்தின் தூரிகை கொண்டு
காத்திருக்கின்றனர் நாளைய கனவுகளுக்காய் ஒவ்வொருவரும்

வாழ்வு இல்லை கனவில்லாமல்!

*▯ 27 செப்டெம்பர் 2015*

கனவு பதினெட்டு

## வாக்குறுதிகள்

வாக்குறுதிகள் கடல் போன்று பரவிக்கிடக்கிறது
சாலை நெடுகிலும் வெற்று வளவுகளிலும்
துர் நாற்றம் ஆறாய் ஓடுகிறது தெரிவு நாட்களில்
வாக்குறுதிகள் வெறும் வார்த்தைகளாக

வலிமை தெரியா வெற்றுக் கோசங்களில்
மிதக்கின்றனர் மாசுள்ள கனவான்கள்
வெற்றுப் பேச்சுக்களில் எழியோர் மயங்கி விடுகின்றனர்
சில நொடிப் பொழுதுகளில்

வெற்றுக் காகிதங்களை முதலீடு செய்து
நம்பிக்கைகளை வாரி இறைத்து
வெற்றுக் கோசங்களில் புழுதி கிளப்பி
வலம் வருகின்றனர் கூத்தாடிகள்
இரந்து கேட்கின்றனர் வாக்குகளை
ஏமாந்து நிற்கும் நலிவு பெற்ற வாக்காளர்கள்

பொய்ப் பேச்சுக்களால் மனங்களை நிரப்பி
பூச்சியங்களால் உரிமைகளைச் சொல்லச் செய்து
கனவுகளில் கோட்டைகளைக் கட்டச் செய்து
ஏமாற்றி விடுகின்றனர் நட்டாற்றில்

மந்திர தந்திரங்களில் சிக்குண்டு
மகிழ்ச்சியின் உச்சத்தில் வாக்காளர்கள்
தாரைவார்த்து விடுகின்றனர் வாக்குச்சீட்டுக்களை
தேர்வு தினத்தன்று.

*▯ 3 ஒக்டோபர் 2014*

கனவு பத்தொன்பது

## நீ

வார்த்தைகளினூடே நீந்திச் சென்று
பேசு பொருளாய் நின்றிருந்தாய் நீ
காற்றினூடே பயணம் செய்து
காற்றலைகளாய் செய்தி சொன்னாய் நீ
நிறங்களுக்குள் ஊடுருவி
வானவில்லாக காட்சி தந்தாய் நீ
பாடல் வரிகளுக்குள் ஊர்ந்து சென்று
கவிப்பாடம் சொல்லித் தந்தாய் நீ
நீர் நிலைகளில் தவழ்ந்து வந்து
தாகத்தினை தீர்த்து வைத்தாய் நீ
பௌர்ணமி தின மகிழ்ச்சியில் உறவாடும் நீ
நிலா வெளிச்சமாய் முகம் காட்டினாய்
செய்திச் சேவையில் சிறந்த ஊடகமாய் நீ நின்று
சிந்திய நற்செய்திகளாய் உலா வந்தாய்
கடல் அலைகளாக கரையை வந்தடைந்த நீ
மீண்டும் கடலைச் சேர்ந்தாய் பெரும் நீராக
படைத்து பரிபாலிக்கும் தேசமொன்றின்
பேரரசியாய் நீ வலம் வந்தாய்

எனது போலவே நீ.

 28 ஒக்டோபர் 2015

கனவு இருபது

## பசுமை படர் நாட்கள்

பல்கலைக்கழக நாட்கள் இன்றும் மெய்ப்படும் நிலை
ஆனந்தம் சூள் கொள்கிறது நினைக்கும் போது
தினசரி வருவார்கள் சில பேர்தான் எங்கள் வரிசையில்
நானும் இன்னும் சிலர் நட்பின் குறியீடாய்
படிக்கட்டு கம்பி இருக்கைகளில் தொங்கிக் கொள்வோம்

மீசை அரும்பாததால் காதல் பூ வளரவில்லை அப்போது
நட்பு மரம் வானத்தைத் தொட்டு
வளர்ந்து நிற்கிறது இன்று வரை
மனதில் ஓர் மயக்கம் இன்னும் உண்டு

பாடங்கள் பற்றி கவனமின்றி முழுநாளும் உல்லாசம்
மற்றவர்களை தனகுதல் உரசுதல் நாளாந்த விளையாட்டு
வம்பு தும்பு வாய்ச்சண்டைக்கு பஞ்சமில்லை
மதம் கடந்த நட்புக்கு நான் மட்டும் நியம சாட்சி

மூளைக்குள் குடையும் பழைய நினைவுகளுடன்
பார்த்து கண்டாய்ந்த அறிவியல் தகவல்கள்
போட்டிப் பரீட்சைக்கு நன்கு பயன்பட்டது பிற்காலையில்
வெவ்வேறு திசைகளில் இப்போது எல்லோரும்

கடந்த நினைவுகள் ஊற்றெடுத்துப் பாயும் நிலை இப்போது
தானாய் வரும் சந்திரன் பழசை ஞாபக மூட்டும் இரவு
நேரங்களில்
யார் யார் எங்கெங்கோ யாரோடு யார் இணைந்து
வாழ்வோடு போவாரோ

பிரிவு வலியின் வடுக்களை சுமந்து
ஓடி மறையா உந்தன் நினைவுடன்
மாறாத அன்பு சுமந்து தினம் தினம்
உன் மரிக்கொழுந்து வாச நினைவுகளுடன்
நிறைந்த வாழ்வு

*7 நவம்பர் 2014*

கனவு இருபத்தொன்று

## பூமிப் பெண்

காற்றைப் போர்வையாக்கி
பச்சை மரங்களால் ஆடை உடுத்து
கொடிகளால் அணி செய்து
மடிக்குள் என்னை அமர்த்தி
பூங்காற்றை அணைத்தவளாய்
சுற்றி வரும் பூமிப்பெண்

நதிகளால் வகுடெடுத்து
பனிக்காற்றால் மூச்சு விட்டு
குளிர் ஓடைகளால் அலங்காரம் செய்து
அமைதியாக சுற்றி வருகின்றாள் என்னை
இப் பூமிப்பெண்

எனது நாட்குறிப்புக்கு விருந்து படைந்து
இரவையும் பகலையும்
தன்னுள் தோன்ற வைத்து
அசைந்து வரும் பூமிப் பெண்

சூரியனை தன்னில் தெறிக்க வைத்து
சந்திரனால் நீராட்டி
மின்னலால் கோலம் போட்டு
மானுடத்தின் விடியலுக்காய்
சுற்றி வரும் பூமிப் பெண்

*22 நவம்பர் 2015*

கனவு இருபத்திரெண்டு

## மூத்தம்மா

என்னை உடுத்துக் கொண்டது
அழகிய வெயில் அன்பாய்
வெளியே போனதால் மதிய வேளை
மூத்தம்மா என்னுடன் கோபித்துக் கொண்டா
என்னை வெயில் விரும்பியதால்

ஆஹா அழகிய வெயில்

அந்தி மாலை கன்னி மழை
என் மீது
படுத்துறங்கி காதருகில்
பேசியது பல கதைகள்
மூத்தம்மா என்மீது எரிந்து விழ
பக்கத்து வீட்டுக் கிழவியும்
என் மீது வீறாப்புக் கொண்டா

ஆஹா அழகிய கன்னி மழை

வாசலெல்லாம் வட்ட நிலா
சுற்றிச் சுற்றி வலம் வருவாள்
கூரையில் ஓட்டை போட்டு
வீட்டுக்குள் புகுந்த நிலா
காதலுக்கு கண்ணில்லை வெக்கமுமா இல்லை என்று
வாஞ்சை கொண்டு
என் மீது காய்ந்து கொள்ள
மூத்தம்மா ஏறிட்டும் பார்க்க வில்லை
அல்லசல்காறியும் கடிந்து விழுந்தா என் மீது

வட்ட வடிவான நிலா...

*6 டிசம்பர் 2013*

கனவு இருபத்தி மூன்று

## வெற்றுக் கோசங்கள்

உணர்வு பெற்று ஊருக்குள் நகர்கிறது கடல்
தேர்வு நாட்களில்
வெற்றுக் கோசங்களால் மூழ்குகின்றன
கிராமங்களும் நகரங்களும்
கொள்கைகள் வார்த்தைகளாக நாறிப்போகின்றன
நள்ளிரவுகளில்
காலம் வார்த்தை ஜாலங்களாக இறந்து போகின்றன
மறு நாளில்

மனங்களின் அழுக்குகள் கீலங்களாக
உடைந்து போகின்றன வாக்குறுதிகளில்
வாக்காளர்களின்வலி தெரியாத பூச்சாண்டிகள்
மடமையில் விளையாடுகின்றனர்
வலிமையிழந்த வார்த்தைகளுடன்
குரங்குகளாக வாலாட்டுகின்றனர்
வாக்காளர் முன்னால்
கற்பனையால் செய்த
போதையில் மிதக்கும் அவர்கள்
காணாமல் போய்விடுகின்றனர் தேர்வு முடிந்ததும்

முறையாகப் பயன்படாமல் சுருண்டு கிடக்கிறது
வாக்கு என்னும் வீரவாள்
வார்தை ஜாலங்களால் நனைந்து போகிறது
இந்த அழகிய தேசம்
வெற்றுக் கோசங்கள் ஒப்பாரியாகி
முழு நீளத்திரைப்படமாய் ஓடுகிறது இந்நாளில்

வேதனைகளை மிச்சங்களாக சுமந்து கொண்டு
காத்திருக்கின்றனர் அடுத்த தேர்வு பூதம் வரும்வரை

*□ 18 டிசம்பர் 2014*

கனவு இருபத்தி நான்கு

## வனத்தின் அழகு

அடர்ந்த காட்டின் மெய் இலை குளைகளின்
மௌன அசைவில் உண்டாகும்
ஏழிசையின் மெல்லிய சதிராட்டத்தில்
இயற்கையை இரசித்து சில் வண்டுகளின்
ரீங்காரத்தில் மனது மயங்கும் நயன நிலை

இறை கொடையின் நீர்ச் சொட்டுக்கள்
இலைகளிலும் தண்டுகளிலும் துள்ளி விளையாடும் நிலை
சாரல்களின் குளிரில் இலைகள் நாணம் கொண்டு
மாருதத்தின் அசைவில் நடனமாடுகின்றன

குளிர் கால உறவின் மகிமை புரிந்த
வர்ணம் பூசிய பல வர்ணப் பறவைகள்
சிறகடித்து அங்குமிங்கும் இடம் மாறி
நகரும் காட்சிகள் இறையின் படைப்புக்கு அத்தாட்சி

வனத்தின் நடுவில் அகப்பட்டுக் கொண்ட நாம்
வனத்தின் சீதளக்காற்றில் மதி மயாங்கி
குளிரம்புகள் உடலில் புகும் வேளை
காட்டின் வெளிகளை நகரமாக்கி வழி தேடி

மேற்றிசை சூரியன் வானத்தினை கிழித்துக் கொண்டு
உள்ளே நகரும் நேரம்
கார்கால குளிர் காற்று கைகளில் சிக்கிக் கொள்ள
விசை விசையாய் காதை தூர நடையின் பின்
இருள் உறையும் நேரத்தில்
மௌனமாய் விடை பெற்றோம் அடவியிலிருந்து

வனத்தின் வாசல் அழகு!

 7 ஜனவரி 2015

கனவு இருபத்தைந்து

## மீன்களின் அறுவடை

பகல் வருவதும் இரவு மறைவதுமாய் கழிகின்றன
பொழுதுகள்
காலைக்கருக்கலில் சேவல் கூவி புவியின் விடிவு
கதிரவன் தனது தோகையைப் பரப்பி
வெளிச்சத்தால் பெரு வெளியை நிரப்பியதால்
செம்படவனின் பொருளீட்டல் முன்னோக்கி நகர்கிறது
விரிந்து கிடக்கிறது கடற்பாய்

கடலின் தாலாட்டில்
படகுகளின் சதிராட்டத்தால்
துடுப்பங்களால் சித்திரம் செய்து
பருவ கால அட்டவணைப் படி
வாடை கொண்டை என காற்றின்
திசைகளை ஆய்வு செய்து
பாடுகளை ஏற்படுத்தி கடலினுள்
அறுவடை செய்கின்றனர் பருவத்தே பயிராய்

கால நிலை முரண்பாட்டால்
பொருள் மடி வற்றி
கரைந்து விடும் சில காலம்

நூல் வேலிகளை நட்டு
பாடும் மீன்களை வழிமறித்து
அம்பாக்கனின் கவர்ச்சியினால்
அள்ளுண்டு போகின்ற மீன்களெல்லாம்
சரணடைகின்றன வஞ்சக வலை மடிகளுக்குள்
மீன்களின் ஓய்வு நிலை மரணத்தில்
கரைகளை அடைகின்றன

பாரை தோறா கொடுவா என்று
மடி நிறைந்து கரை சேர்ந்த பூரிப்பில்
முதலிடா விசித்திரமான அறுவடைகள்
பேத்தை நீங்கலாக விற்று வரவு
செம்படவனின் வாழ்வாதாரம்
நிறைவு பெறும் வண்ணம்

இறையின் உபசரிப்பு
நன்கொடை எனலாமா?

காத்திருக்கும் புதிய பொழுதொன்றிற்காய்.

அம்பா = கடற்கரையில் வலை இழுக்கும் போது பாடும் பாட்டு

*16 ஜனவரி 2014*

## தலைப்புப் போருங்கள்

அடிக்கடி அவள் கனவில் தோன்றும் காட்சி
கடினமானதாக இருந்தது மெய்ப்படுத்த
சில வேளைகளில் மன உளைச்சலும் தான்
மீளவும் உறுதிப்படுத்துவது மயக்கத்தையும் தந்தது

எங்கேயோ பார்த்தது போல் ஓர் உணர்வு சதா காலமும்
போகுமிடமெல்லாம் கண்கள் அலைந்தன
உள் மனதின் தேடல் எல்லாப் பக்கங்களிலும்
உருவத்தை சொல்லி நண்பர்களிடம் கதைத்தும் காட்டியும்
இன்னும் விடை கிடைக்கவில்லை

இன்று அவளை அடையாளம் கண்டு கொண்டேன்
பிரயாணம் செய்யும் போது பொதுப் போக்குவரத்தில்
கனவில் வந்த மாது சுவரில் தொங்கியிருந்தாள்
மீள முடியாத நோய் ஒன்றுக்கான விளம்பரம் அது

மெலிந்த தோல் உடலோடு ஒட்டிய தோற்றம்
அதனுடன் இணைந்த வேறு இருவரின் புகைப்படம்
உருவம் அடையாளம் காண முடியாதபடி
படிப்பினைக்காக அமைத்துள்ளனர் அந்த விளம்பரத்தை

கனவில் தோன்றும் அவள்
ஆட்கொல்லி நோய் ஒன்றின் தடுப்பு விளம்பரத்திற்காய்

சோக நதி பெருக்கெடுக்கிறது!

*8 பெப்ரவரி 2014*

கனவு இருபத்தியேழு

## வாசித்த கவிதை

வாடகைக்குப் பெற்ற நிலவின் வெளிச்சத்தில்
கவிதையின் உடல் மெலிந்து காட்சி தந்தது
மாலை மயங்கிய நேரத்து கன மழையில்
கூரையால் வழிந்த கண்ணாடிச் சொட்டுக்கள்

வாசிக்க முடியவில்லை கவிதையின் உட்பொருளை
வாய்க்கொழுப்பால்
சீலையால் வடிந்தது கவிதையின் சாராம்சம்
மெல்லிடை பற்றிய கருத்தாக்கம் அற்புதம்
கள் வடியும் பூக்களுக்கு ஒப்பானது அந்தக் கவிதை

தூவானம் முழுவதும் பரவியிருந்த வீட்டின் வெளி
கவிதைகளைப் பிரித்து ஒவ்வொரு அடியாக
அலசி ஆராயும் நிர்ப்பந்தம் என்னுள்ளே
கவிதையின் கண்களும் காதுகளும் மற்றவைகளும்
அலசி ஆராயப்பட்டன நன்றாக

கவிதையை முணு முணுத்து கன்னத்தில் முத்தமிட்டு
கவிதையின் செப்பத்தால் நான் மயங்கி உறவாடி
கவிதையின் கருத்தோடு ஒன்றாகி சில நிமிடம்
மூச்சுத் திணறி
கருத்தால் பயங்கொண்டு
முத்தாய்ப்பு வைத்து
அமைதியடைந்தேன்.

 10 மார்ச்சு 2013

கனவு இருபத்தியெட்டு

# ஆகாயத் தோட்டம்

மண்ணை முத்தமிடாத மழைத் துளிகள்
சிறகடித்து திரிந்தன ஆகாயம் எங்கிலும்
கால்கள் முளைத்த தரையை மறந்த நதிகளும் தான்
ஆகாயம் நெடுகிலும்

தொங்கிக் கொண்டிருக்கும் மனிதர்கள்
மாய வீரர்கள் ஆகாயத்தில்
வௌவ்வால்கள் போன்று
விந்தையான ஆகாய வெளி
நீந்திச் செல்கின்றனர் மனிதர்கள்
மீன்கள் போன்று
எல்லை இல்லா பெரு வெளியில்

பூமரங்கள் வளர்ந்து
பனிவாடையால் நீரூற்றி
கரும் முகில்களால் உரமூட்டி
காதலுக்கு அர்ப்பணம் செய்துள்ளான்
ஆகாயத் தோட்டத்தை இந்தக் கிறுக்கன்

ஊடலில்லை காதலுக்கு.

 30 மார்ச்சு 2014

கனவு இருபத்தியொன்பது

## கனவுத் தொழிற்சாலை

முழு நேர வேலை எனக்கு
கனவுத் தொழிற்சாலையில் சம்பளமாக
மகிழ்ச்சியும் துக்கமும்
சில உற்பத்திகள் படைப்பாக வருகின்றன
மனித இனம் பயனடைவதற்கு

எழுத்துக்களில் வராதவைகள்
ஏராளம் ஏராளம்
உப உற்பத்திகளும் அனேகம் தான்
பாடத்தெரியாதவர் பாடுவதும்
தெரியாதவர் ஆடுவதும்
எழுத முடியாதவர் கவிதை எழுதுவதும்
கனவுத் தொழிற்சாலையிலேயே

இலைகளில் நடப்பதும்
ஆகாயத்தில் ஓடுவதும்
மின்னலைப் பிடிப்பதும்
கனவுத தொழிற்சாலையில் மாத்திரமே

பயனுள்ள உற்பத்திகள்
அனேகம் பரவிக் கிடைக்கின்றன
கனவுத் தொழிற்சாலையில்
மனித வர்க்கத்திற்கு
எழுத்துருவில் வரும் போது

*4 ஏப்ரல் 2015*

கனவு முப்பது

## மழை வெள்ளம்

போர் வீரர்கள் போன்று சார சாரயாய் தூரத்தே இருந்து
ஊரின் எல்லை தாண்டி
மடைதிறந்தாற் போல மழை வெள்ளம்
இந்த ஊருக்குப்புதிதல்ல.

ஊரின் வனப்பை நாசப்படுத்தி
ஆற்றங்கரைப் புல் வெளியின் அழகையும் பாழ்படுத்தி
நீரால் முப்பக்கமும்
ஊரையும் முற்றுகையிட்டு
ஆண்டாண்டு காலமாக அழகுபடுத்திய
வீட்டின் முற்றத்தையும்
வீடுகளையும் நொடிகளுக்குள் நாசப்படுத்திற்று
இந்தநீர்ப்பெருக்கு,

சொந்தமில்லை எங்களுக்கு இப்போது
வீடுகளும் உடமைகளும்
பல வருடங்களாக உரிமை கொண்டாடியவைகள்
வாலான்களும் மண்டூகங்களும்
உரிமை கொண்டாடிற்று
அவ் வீடுகளுக்கு,

செயற்கையாக்கப்பட்ட
அரசின் முகாம்களில்
நாங்கள் இப்போது
அசௌகரியங்களுக்குப் பஞ்சமில்லை
பெருமூச்சுடன்
பெரிசுகளும் சிறுசுகளுமாய்

தலைக்கு இருநூறு பெறுமதியாய்
சமைத்த உணவு அரசின் ஏற்பாட்டில்
போர்வைகளும் போர்த்துவதற்கு
படுத்துறங்குவதற்கு பாய்களும் இலவசமாய்
அரச அதிகாரிகளின் பதிவுகளுக்கு மத்தியில்
வைத்திய அதிகாரிகளின் அறிவுரைகள் வேறு
பதிவுகள் இல்லாமல் எதுவும் இல்லையாம்

உணவு பரிமாற உரிய வசதியில்லை
மாணவர்களின் மேசையில் தான் எல்லாமே
பாடசாலை என்பதால்
படுத்துறங்குவதும் அதே மேசையில் தான்
முறையான வசதியில்லை காலைக் கடன்களுக்கு
ஏழெட்டு நாட்கள் கழிந்தனவே

மழை வெள்ளம் வடிந்துவிட்டதாம்
காதுகளை உசுப்பியது நல்ல செய்தியாய்
திரும்பினோம் வீடுகளுக்கு
மீளவும் நாம் வருவதில்லை என்ற பெருமூச்சுடன்
பேசிக்கொண்டன மண்டூகங்கள் தூரத்தே இருந்து
பாவம் இவர்கள் என்று.

 1 யூன் 2014

கனவு முப்பத்தியொன்று

## கனவில் நீந்தும்

மயான அமைதி நிலவும் வேளை
மரவட்டையின் அசைவில் கிளைகளின் முறிவால்
மயக்கம் தெளிந்த இவர்கள்
மாலையின் சீதளக் காற்றில்
கொடிகிப் போகினர் ஒருவர் பின் ஒருவராக

மகா சக்தி சூரியனைப் புறந்தள்ளி
வானத்து மீன்களை கண்களில் கொண்டு வந்து
கார் நிலவை தம் கைகளுக்குள் உண்டாக்கி
மென் கூந்தல் பொதிகையில் ஒழிந்து மறைந்து
விண்ணில் ஏறி வட்டமடித்தனர்

அன்பென்னும் அலைவரிசையில் இதயங்கள் பூப்பதற்கு
மனதின் அன்பொலிகள் ஊற்றெடுத்துப் பாயும் நிலை
ஐயத்தின் மெய்யிருளில் நீந்திக் கொண்டு
முது கனவில் நீந்தும் இவர்கள்

மகிழ்ச்சிக்குரியவர்கள்.

14 யூலை 2015

கனவு முப்பத்திரெண்டு

# எறும்புகள்

ஒன்று இரண்டு ஒன்றன் பின் ஒன்றாய்
அழகு ஊர்வலம் ஆயிரக்கணக்கில் ஊர்ந்து செல்வர்

இடி முழக்கம் இவர்களுக்கு குறி சொல்லும்
இலகுவில் கண்டறிவர் பூமிப்பிளவையும்
கண் கலங்கவைக்கும் சாமர்த்தியம் இவர்களுக்கு
யானைக் கூட்டத்தையும் மானிடரையும்

மனிதர்களால் பழகிக் கொள்ளாத
இவர்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தது வரிசைப்
பாடம்
சோம்பலற்ற தனம் இவர்களிடத்தில் அதிகம்
மனிதர்களிடத்தில் அதிகம் மண்டியிருப்பது

வரிசையாய் சென்று தூர தேசம் அலைந்து
இனிப்பின் இரசனை அறிந்து நுகர்ந்து
மானுட இடத்தின் நெருக்குதலில் சிக்கி
சிலர் மடிந்து போவர்
மற்றவரெல்லாம் வெற்றி பெற்றவராய்
இருப்பிடம் நோக்கி ஊர்ந்து செல்வர்

பல பேர் கட்டி இழுப்பது ஒர் உணவினை
பிரமிக்க வைக்கும் செயல்
ஒற்றுமை பற்றி இவர்களிடம் தான்
படித்திட வேண்டும் மனிதர்கள்

வியப்புக்குரியவர்கள்.

*26 செப்டம்பர் 2014*

கனவு முப்பத்தி மூன்று

## மாலைக் கருக்கலில்

நிலவு வெளிச்சம் மூட்டப்பட் பெரு வெளி
சம்மானில் வந்த
வனப்பான குருவிகள் இவை
நீர்ப்பட்சிகள் சிறகடித்துப் பறக்கின்ற
அந்தி மாலைப் பொழுதினிலே
இருவரும் குருவிகளாய் மாறி
இன்பங்களை இறக்கை கட்டிப் பறக்கச் செய்து
மாலைக் கருக்கலை நெடியதாக்கி
சீதளக் காற்றில் ஓர் ஒற்றை ஆறுதல் கண்டு
மகிழ்ச்சியடைகின்றனர்

மீன்கள் சுவாசிக்கும் சத்தம் மெல்லியதாய்
நீரின் வெளியில் வந்து சேர
காற்றினூடே இலைகள் மெல்லிசைக்க
பாம்பு அசைந்து செல்வது போல்
உடலில் தொட்டவாறு
காற்று அசைகிறது வெறுமையாக

பருவகால உள்ளுணர்வு சுற்று வட்டத்தில்
பச்சை நரம்புகளால் சூடேற்றி
உடல்களைப் பெருக்க வைத்து
உட்பச்சையில் நீர்ப் பொருக்கை ஆக்கி
இடுப்பரையில் இயங்கி இடம் பெயரும்
இன்பத்தின் ஊஞ்சலில் ஊறச் செய்து
குருவிகள் மகிழ்ச்சி கொண்டாடிற்று
பொய் வாழ்வின் அர்த்தங்களை
மெய்யாக்க குடைசாய்ந்தனர்

*4 ஒக்டோபர் 2015*

கனவு முப்பத்தி நான்கு

## வட்டா

சடங்கு சம்பிரதாயம் திருமண நிகழ்வுகளில்
வட்டாதான் முன்னிலை வகிக்கும்

எனது ஆழிக் கடல் வாடி வதங்கி
சுருண்டு கிடந்தது வட்டாவுக்குள்
சுருண்ட புகையிலையாய்

நிலவை உருட்டி செப்பமிட்ட பாக்குகள் சில
சுவர்க்கத்தின் பாலாற்றினை முறுக்கிப் பிளிந்த
சொட்டுச் சுண்ணாம்பு

அரசிலை அழகில் வெற்றிலைகள் சில
ஏழாம் உலகில் செய்யப்பட்டது அவ்விலைகள்
வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு ஒன்றாகக் கூடி
சக வாழ்வு வட்டாவுக்குள்

அரசமரத்தின் இலைகளை ஒத்த பல இலைகள்
வட்டாவைச் சுற்றி தொங்கிக் கொண்டிருந்தன
வட்டாவின் அழகில் கன்னியர்கள்
மின்னி மின்னி மயங்கிப்போவர்

பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு ஒன்றாக போட்டால்
இழுத்து ஒட்டிக்கொள்வது போல்
அந்தி மாலை வானத்தை உதடுகளில்
கன்னியர்களும் முதியவர்களும்

நிகழ்வுகளில் பெரும்பாலும்
வட்டாதான் பிரதம விருந்தினர்
அந்தக்காலத்தில்.

*14 ஏப்ரல் 2015*

கனவு முப்பத்தி ஐந்து

## யாக்கையின் புன்முறுவல்

மறக்க முடியுமா அந்த நாட்களை!

என் ஊடுருவல் உன் முகத்தின் வெளிச்சத்தில்
கற்றுக் கொண்ட பாடம் அது
காலமெல்லாம் மறவோமா
மூக்குத்தியில் மயங்கிக் கிடந்த காலமது

கூந்தல் காட்டில் சிக்கித் தவித்த நாட்கள் அவை
காற்றடைத்த கூட்டில் ஆசை மிகுந்த பருவம் அது
அருவருப்பு மண்டியதும் அப்போது தான்
மெய் மணமும் அதியுயர் வாச வலயம் தான்

அரை இடுப்பின் மதுவில் தோற்றுப் போனதால்
மதுவின் மயக்கத்தில் இறந்து போன காலமது
மூக்கின் நாளங்களின் முன்பனியை ருசிபார்த்து
மூக்குத்தி வெளிச்சத்தில் முக்தியடைந்த நாள்கள் அவை

கன்னங்களில் வடியும் பாலாடை முகர்ந்து
முலைகளில் முகம் பதித்து
கடிக் கதைகள் பேசி காதுகளில்
உலகம் தம் காலடியில் சுற்றியதோ

நீண்டு படர்ந்த பகல் பொழுதின் பரிசாய்
நிழல்களால் பரவிய அந்த இரவுகள்
மையிருட்டு மயக்கத்தின் மெல்லிய வெளிச்சத்தில்
வானோர்களின் நடமாட்டம் அதிகரித்த வேளையது
மாலையும் மயங்குமளவு அமைதி குடிபுகுந்த நேரமது
மெய்யிருளை ஆடையாய்ப் போர்த்திய
அந்த இதமான இரவுகள்

யாக்கையின் புன் முறுவலால்
மானுடச் சதைகள் போட்டி போடும் விருப்பங்கொண்டு
முன் ஆயத்தம் செய்யும் அந்த வேளை

மறக்க முடியுமா அந்த நாட்களை!

*4 ஏப்ரல் 2015*

கனவு முப்பத்தி ஆறு

## மழை

பூமிக்கு மகிழ்ச்சி  மழை விழுந்தால்
பழங்களாகவும் கொட்டும் அரிதாக
பயிர்களும் மகிழ்ச்சியில் குளிக்கும்
உல்லாசம் கொண்டாடி உரியகாலத்தில்
பூரிப்பு நிலையில் பூமியும் பயிர்களும்

பூமியின் சிந்தனையின் பயனாய்
புதிய புதிய படைப்புக்கள்
மண் நீரின் கலவையாகப் பயிர்கள்
உள்ளிருந்து பச்சைகள் உருவாகும்
நெடிதும் கொட்டானுமாய்
பயிர்களுக்கு தாகம் ஏற்பட மழை கண்டு
உள்ளீடுகள் பயிர்களின் கருணையால் உண்டாகும்
சோறு, பருப்பு, சதை என்று பல பெயர்களில்
பச்சையாகவும் சமைத்தும் உண்ணும்
உணவுச் சங்கிலிகள் இப்பேருலகில்

பஞ்சம் உலகில் விரியும் மழை இல்லையெனில்
தாவரங்களின் பூரிப்பில் பஞ்சம் ஒழியும்
மொத்தத்தில் மழை ஒரு கொடை.

 17 மே 2015

கனவு முப்பத்தி ஏழு

## திருமணம்

சில நொடிப் பொழுதுகளுக்காய்
பெண்மையை ஏமாற்றும்
ஆண்மைகள்
திருமணம் என்ற போர்வையில்
கற்பைத் திருடும் இவர்கள்
உண்டு உடுத்து
பிரளயம் செய்து
கைவிட்டு விடுகின்றார் நட்டாற்றில்
தன் குஞ்சுகளுடன்
தாய்மைகள்,
பொறுமையுடன் காத்திருக்கின்றனர்
திருடன்
வரும் வரையில்
பஞ்சத்தை உண்ணும் இவர்கள்
எதிரிகளாய் காலம்
இவர்களைத் துரத்துகின்றது.

*20 மார்ச்சு 2014*

கனவு முப்பத்தி எட்டு

## விதைகள்

மூடுண்ட விதைகள் மண்ணில்
பலன் தருகின்றன பயிர்களாக
மண்ணிண் மயக்கத்தால்
மானிட வர்க்கத்திற்கு

உடலில் விதைக்கப்படும்
மனித வித்துக்கள் போல
முளைப்பதும் அமிழ்ந்து போவதும்
இறையின் விளையாட்டு
வீரியத்துடன் சில வித்துக்கள்
மனிதர்களின் தாதுக்கள் போன்று
வெளி வருகின்றன மண்ணிலிருந்து
நல்ல பயிர்களாய்
சமிச்சுப் போகின்றன மண்ணுக்குள் சில
கருவறையில் மரிப்பது போன்று

 13 மே 2014

கனவு முப்பத்தொன்பது

## இன்னுமொரு மாம்பழக்கொச்சி

வெண் முகிலை உடுத்தி
செவத்தச் சேலையால் போர்வை செய்த
அழகு ஏராளம் ஆடைகளுக்குள்
பச்சைப்பசேல் போன்ற முகம்
மூக்குத்தி ஒன்று முக்கோண மூக்கில்
மரத்தினால் ஆப்பு ஒன்று
சுருண்ட முடிக் கொண்டையில்

கடைக்கண் பார்வையால்
இடுப்பில் என்னை சொருகி
கண்ணுக்குள் புதைத்துக் கொண்டாள்
சிறைப் பிடித்துக்கொண்டேன் மனதுக்குள்
நான் அவளை
உட்கார்ந்து அவளின் மூக்கில்
பின்னர் கன்னங்களிலும் தொங்கிக் கொண்டேன்
அனுமதி இல்லாமல்
இன்னும் ஊஞ்சல் போட்டு ஆடலாம் போல்
அவளின் காதுகளில்

உதிரம் ஓடுவது கூட
வெளியில் தெரிந்தது
கொள்ளை அழகு அவள்
அடிக்கடி நனைந்துகொண்டாள்
என் பெருமூச்சில்
இத்தனைக்கும் ஒருவயது கூட இருக்கும்
என்னிலும் பார்க்க
நினைத்துக் கொண்டேன்
இன்னுமொரு மாம்பழக்கொச்சி என்று.

 13 மே 2013

கனவு நாற்பது

## காத்திருக்கும் இவர்கள்

இன்னும் அடங்கிப் போகவில்லை
யுத்தத்தின் வலிகள்
காத்திருக்கும் இவர்கள்
உறவுகளைத் தேடி

இன்னும் முகவரிகள் கிடைக்கவில்லை
அடையாளமும் தெரியவில்லை
இருந்த இடத்தின் எங்கே என்று
அனைத்தையும் இழந்து அனாதைகளாய்
அலை மோதித்திரியும் இவர்கள்

தொலைந்து போன இடமும் தெரியவில்லை
இருக்கும் இடமும் புரியவில்லை
காத்திருக்கும் இவர்கள்
தொலைந்தோர் வரும் வரை

பொருளை ஈட்டித்தந்தவர்கள்
இன்னும் புரியவில்லை எத்திசையில் உள்ளனர் என்று
வேதனையுடனும் கண்ணீருடனும்
கண்கள் பூத்திருக்கும் இவர்கள்

கடத்தப்பட்டோர் காணாமல் போனோர்
தொலைந்து போனோர் இன்னும் பலவிதமாய்
இனத்தின் விடுதலைக்காய்

அதிகாரத்தில் உள்ளோர் அறைகூவல் விடுக்கின்றனர்
பேசுவதற்கு வாருங்கள் என்று
ஆணைக்குழு என்ற முக மூடியுடன்
எதிர் பார்ப்பில் காலத்தைக் கழிக்கும் இவர்கள்.

*22 ஏப்ரல் 2013*

கனவு நாற்பத்தொன்று

## எம் தலைமைகள்

கொதிப்பில் எம் சமூகம்
உரிமைகள் மறுக்கப்பட்டதனால்
பூரிப்பில் எம் அரசியல் தலைவர்கள்
நன்றாக நடப்பதனால் அவர்களின் வியாபாரம்

அடி மாட்டு விலைக்கு
வாக்குகளை வாங்கும் இவர்கள்
கொள்ளை இலாபம் அடிக்கின்றனர்
விற்றவர்கள் பாவம் விபரம் தெரியாமல்
தங்களது வாக்குகளை

வழி காட்டவும் விபரிக்கவும்
யாரும் இலர்
உரிமைகளைத் தொலைத்து விட்ட
வாக்காளர்கள்
முகவர்களின் தயவுக்காக காத்திருக்கின்றனர்

அற்ப சலுகைகளுக்காக ஏங்கும்
எம் தலைவர்கள் வாய் மூடி மௌனிகளாய்
உரிமை பற்றி எதுவும் பேசாமல்
தூங்கிக் கொண்டிருக்கின்றனர்

விடியல் எப்போது?

 13 நவம்பர் 2015

கனவு நாற்பத்து இரண்டு

## கவிதைகள்

கற்பனைகளும் எண்ணங்களும்
கண் முன்னே வருகின்றன கவிதை வரிகள் மூலம்
வாழ்க்கையின் கதாப்பாத்திரங்கள்
உயிருள்ள யதார்த்தங்கள் என்று பல
வெளிப்படுத்தப்படுகின்றன

கவிதைகளின் வாயிலாக
சொல்லில் புதையும் எழுத்துக்கள்
உள் மனக் கொண்டாட்டத்தினால்
ஊற்றெடுக்கின்றன மனத்தடியிலிருந்து

இறைவனின் வரம் சிறந்த கவிதை வரிகள்
ஊத்தைகள் அசை போடப்படுகின்றன
கவிதை என்னும் போர்வையில் சில நேரங்களில்
பயன்படுவதில்லை உயிரற்ற ஆக்கங்கள்
இப்போது

நெஞ்சை தொடுகின்றன நேசமான கவிதைகள்
காயப்படுத்துகின்றன மனித மனங்களை
விறைப்பான வரிகள்
வேதனையை ஏற்படுத்தவல்லது மற்றும் பல
கண்ணீரையும் கொண்டு வரும்
இன்னும் சில
மன மகிழ்ச்சி எழுதுபவருக்கு மாத்திரமே

*16 ஒக்டோபர் 2013*

கனவு நாற்பத்தி மூன்று

## மாயக் கண்ணாடி

தெரிகிறது மாறிவரும் காலங்கள்
மாயக்கண்ணாடியில்
கடந்து போகின்றன
ஒன்றன் பின் ஒன்றாக
தினசரி நாட்களாய்
காலக்கண்ணாடி சுழல்வதனால்

காலநிலை மாற்றங்கள்
வியக்கத்தகு சம்பவங்கள்
கண்முன் நடப்பது போன்றே
மாயக்கண்ணாடியில்

வனாந்தரங்களின் விந்தைகள்
பூமிக்கடியில் புதையல்கள்
கடலில் ஆழத்தின் திரவியங்கள்
கண்டு கொள்ள முடியும்
தொட்டு விடும் தூரத்தில்
மாயக்கண்ணாடியில்

மனிதனின் கண்டுபிடிப்பால்
வருகின்றன கண்முன்னே
நிதர்சனமாய்
இவைகள் அனைத்தும் அச்சொட்டாய்.

*13 ஏப்ரல் 2013*

கனவு நாற்பத்து நான்கு

## தூது

கண்களால் போர் செய்து
தூய அன்பினால் வலை வீசி
காற்றில் நீந்தும்
நறு மணத்தில் தூது விட்டு
மின்காந்த அலைகளால்
செய்தி அனுப்பி
பதிலுக்காய் காத்திருக்கும் இவன்
நெடு நாட்களாக.

 3 மே 2015

கனவு நாற்பத்து ஐந்து

## ஏதிலிகள்

மரண ஓலங்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றன
மத்திய உலகின் தீ மூட்டத்தில்
உயிர் குடிக்கும் மேற்கின் சூரியன்கள்
தலை நிமிர்ந்து நிற்கின்றன விசும்பியபடி
கொலை வெறிக் கூச்சலுடன்

தொண்டைக்குள் மரண மது நிரம்பி நிற்கின்றது

குருதி உறையா ஆயுதங்கள் சகிதம்
எழுந்து பறக்கின்றன இரும்புப் பறவைகள்
நெருப்பு மழை கொட்டுகின்றன வானிலிருந்து
குருதிப் பொட்டலங்கள் பூமி நெடுகிலும்
அகதிகளின் சதைப் பிண்டங்கள் கடல் முழுவதும்

குருதியின் காமம் தொடர்கிறது

உயிரைக் கையில் பிடித்தபடி
ஏதிலிகளின் கடல் பயணங்கள்
துயர் மழையால்
அச்சம் நிரம்பி வழிகிறது
திகதி குறித்த மரணங்களை நோக்கி
ஆவியாகப் போகும் உயிர்த் துளிகள்
நிரம்பிய கனவுகளுடன் கரைந்தொழுகும் இதயங்கள்
சிக்குண்டுள்ளன தேசங்களின் முள்வேலிக்குள்
மிருகங்களின் சாயலில் இவர்கள்

மரணத்தை மாலை போட்டு வரவேற்கின்றனர்

கடலை முத்தமிடும் உடலங்கள்
இறந்து போன இதயங்களுடன்
நிறச் சீருடைகளின் மத்தியில்
விலங்கிடப்படாத கைதிகளாய்
விறைத்தபடி கிடக்கின்றனர்
உயிரற்ற வலிகளுடன்

இவர்கள் விதி இதுவா
உலகம் உடைந்து நொறுங்கும் வரை
மரண வெறியாட்டம் தொடரும்?

இது அவர்களது உலகம்!

*1 செப்டெம்பர் 2015*

## ஆயிஷா வெளியீட்டகத்தின் ஏனைய வெளியீடுகள் :

01. மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம் பகுதி I)
    - முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் -

02. மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம் பகுதி II)
    - முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் -

03. பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள்
    - முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் -

04. பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள்
    - முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் -

05. மாம்பழக் கொச்சி (கவிதைப் புத்தகம்)
    - முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் -

06. மருதமுனை அல்மனார் மகா வித்தியாலய வரலாறு
    - முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் -

07. An Introduction to public Administration and Divisional Secretariat System in Sri Lanka
    - முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் -

# கடைசிப் பக்கச் செய்தி...

வரைந்தேன் சில வரிகள்
கவிதைகளாக
வெற்றுக் காகிதத்தில்
இன்னாரின் சாயலில் உள்ளது
என்றான் ஒருவன்
இருக்கலாம் என்றேன்

கவிப் புத்தகம் ஒன்றை வடிவமைத்தேன்
முதன் முதலாக
மாம்பழக் கொச்சி என்னும் பெயரில்
அச்சொட்டாய் இருப்பதாகச் சொன்னார்கள்
வேறு ஒருவரின் சாயலை

நிறுத்தவில்லை
இன்னும் கீறினேன்
இன்னுமொரு பதிவாக புத்தகம் ஒன்றை
யாரைச் சொல்லப் போகிறார்களோ?

ஒப்பிட்டுச் சொல்வதே
சுற்றியிருப்பவர்களின் பொறுப்பாகும்

எனக்கென்றொரு
எழுத்து நடை
நான் நானாக இருக்கமுடியாதா?
என்னை விட்டு விடுங்கள்
நான் நானாகவே
இருந்து விட்டுப்போகிறேன்.



"மிதக்கும் கனவுகள்" நௌபலின் இரண்டாவது கவிதைத் தொகுதி. இந்தத் தொகுதியைப் பார்த்தால் கவிதை பல இடங்களில் உட்கார்ந்திருக் கிறது. இது ஒரு கவிஞனுக்குக் கிடைக்கும் பாக்கியம் தான்.

கலை பல இடங்களில் இவரது கவிதைகளில் பூத்துக்கிடக்கிறது. கலை பூக்கும் தோட்டம் கவிதையல்லவா! பலரது படைப்புக்களில் பொன்னாங்கண்ணி கூட பூப்பதில்லை. சும்மா சுவரில் கிறுக்கு வதைப் போல் கிறுக்குவதற்கு ஒரு கவிஞன் தேவையுமில்லை. ஆகாயத்தைப் போல கவிதையை உயரமாக்கி நமக்கு ஆச்சரியத்தை ஊட்டுவது கவிதையில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற உணர்வுகள் தான். அது இந்தத் தொகுதியில் உயிருடன் இருக்கின்றது.

- சோலைக்கிளி

இன்று கவிதையும் உலகமயமாக்கப்பட்டிருக்கிறது. உலகின் புகழ் பெற்ற மொழிகளின் கவிதைகளையெல்லாம் தமிழில் படிக்கின்ற பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

எமது தமிழ்மொழிக் கவிதையும் வேறு வேறு மொழிகளில் தரிசனம் தருகிறது...

முழுப் பிரபஞ்சமும் கவிதைகளால் வடிவமைக்கப்பட்ட இந்த நாளில் நௌபலின் "மிதக்கும் கனவுகள்" உலகக் கவிதை என்னும் தோரணத்தின் ஒரு குருத்தோலையாகி... எனக்குள் களிகொண்டாடுகிறது.

- எல்.எல்.எம். ஹனீபா

Rs 250-00

ASNA
Offset Printing
MARUTHAMUNAI

ISBN 978-955-42405-1-3